## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, KARUR

C.C. No. 48/2020

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : சரவணன்

Father's Name : முருகேசன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 13.07.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், வஞ்சியம்மன் கோவில் தெருவில் குடியிருந்துகொண்டு லோடுமேனாகவும், வியாபாரமும் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது

தெருவில் வசிக்கும் நபர் ஆவார். இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தின்போது நான் வேலைக்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

கடந்த 23.10.2019 அன்று இரவு 10.30 மணியளவில் நான் வேலை முடித்து கீரைக்கார தெரு, ஐயப்பன் மளிகைக் கடை அருகே நடந்து வந்துகொண்டிருந்தபோது, எனக்கு தெரிந்த பழைய செக்குமேட்டை சேர்ந்த கண்ணன் மகன் சூர்யா என்பவர் எங்கள் தெருவை சேர்ந்த கணேஷ் என்பவரிடம் பிராந்தி குடிக்க பணம் கேட்டதாகவும், அதற்கு கணேஷன் பணம் இல்லை என்று சொன்னதற்கு சூர்யா இப்பதான் வேலை முடிந்து வீட்டிற்கு வர, உன்னிடம் பணம் இல்லையா என்று கூறி அவன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கணேசனின் கழுத்தில் வைத்து ஒழுங்கா பணத்தை எடுடா என்று சொன்னவுடன் கணேசன் பயந்து கொண்டு அவர் சட்டை பையில் வைத்திருந்த பணம் ரூ.300/-ஐ எடுத்து அவனிடம் கொடுத்தார் என்றும், அப்போது இதை வெளியிலோ, போலிசில் சொன்னால் உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டதாகவும், அதை நான் நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, KARUR

C.C. No. 48/2020

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | குணசேகரன் |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 13.07.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், வஞ்சியம்மன் கோவில் தெருவில் குடியிருந்துகொண்டு துணி தேய்க்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது தெருவில் வசிக்கும் நபர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்

எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பம் முறையே அ.சா.ஆ.1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்னிலையில் போலிசார் யாரையும் விசாரிக்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

கடந்த 24.10.2019 அன்று காலை 11.00 மணிக்கு நானும் எங்கள் தெருவை சேர்ந்த கணேஷன் என்பவரும் கரூர் லைட்ஹவுஸ் கார்னர் பஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்தோம் எனவும், அப்போது எங்களுக்கு தெரிந்த சூர்யா என்பவர் நின்றுகொண்டிருந்தார் எனவும், அவரை போலிசார் பிடித்து எங்கள் இருவர் முன்னிலையில் விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் எனவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 24.10.2019 அன்று இரவு 10.30 மணியளவில் வஞ்சியம்மன் கோவில், கீரைக்கார தெரு, ஐயப்பன் மளிகை கடை அருகே தனக்கு தெரிந்த கணேஷன் என்பவரிடம் கத்தியை காட்டி மிரட்டி ரூ.300/– பறித்தேன் என்றும், சம்பவத்தை பார்த்த சரவணன் என்பவர் வருவதை பார்த்து தான் வைத்திருந்த கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தாகவும், மேற்படி ரூ.300/–ஐ பாரில் தண்ணியடித்துவிட்டு, செலவு செய்துவிட்டதாக கூறியதாகவும், பின்பு தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அந்த

கத்தியை போலிசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**